பொது சன நூலகம்

# ராணுவத்தின் முயற்சி தொடர்ந்தும் முறியடிப்பு

(யாழ்ப்பாணம்) விமானப்படையின் உதவியுடன் ஆனையிறவு இராணுவ முகாமுக்குள் நுழைய முற்படும் இராணுவத்தின்மீது விடுதலைப் புலிகள் நேற்று கடும் தாக்குதலை நடத்தினர்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் [illegible] திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 17 இதழ்: 172
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 2-8-1991

## விடுதலைப் புலிகளின் 'தமிழீழ அமைச்சரவை'

[மணிலா] வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகள் 'தமிழீழ அமைச்சரவை' யை அமைத்துள்ளதாகவும் இது யாழ்ப்பாணத்திலிருந்து செயற்படுவதாகவும் கொழும்புச் செய்தி

(4ம் பக்கம் பார்க்க)

## 2 மைல் தூரத்தில் படையினர் நிற்கின்றனர்

(கொழும்பு) ஆனையிறவு முகாமிலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்திலேயே படையினர் நிற்பதாக நேற்று நடைபெற்ற

(4ம் பக்கம் பார்க்க)

# ★ ஆனையிறவில் சிக்கிய இராணுவத்தை மீட்கும் இறுதித்தாக்குதலை நடாத்த படையினர் பெரும் முஸ்தீபு

(கொழும்பு)

**ஆனையிறவு முகாமில் சிக்கியுள்ள இராணுவத்தினரை மீட்பதற்கான இறுதித்தாக்குதல் எந்நேரமும் நடத்தப்படலாம் என்றும் இதற்காக முழுஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் பங்குபற்றிய இந்த இராணுவ அதிகாரி கொழும்பில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த இராணுவ நடவடிக்கை தொடர்பாக வரைபடங்களுடன் செய்தியாளர்களுக்கு விளக்கிய அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

கட்டைக்காட்டிலிருந்து ஆனையிறவு முகாம் 9.6 கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது. படையினர் 7 கிலோ மீற்றர் தூரம் வரை முன்னேறியுள்ளனர்.

(3-ம் பக்கம் பார்க்க)

## ஆவணங்களின்றி இருக்கும் தமிழர் நாடுகடத்தப்படுவர்

(புதுடில்லி)

தமிழகத்தில் தங்குவதற்கான தக்க ஆவணங்கள் எதுவுமின்றி எழுபத்தையாயிரம் இலங்கைத் தமிழர்கள் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவ

(4ம் பக்கம் பார்க்க)

## வீரவேங்கைகளுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவில் நேற்று முன்தினம் வீரமரணமடைந்த வீரவேங்கை அன்புவின் [யாக்கோஅஸ்பின் கோட் ஆனைக்கோட்டை] புகழுடல்மகளின் அஞ்சலிக்காக ஆறுகால்மடம் ஸ்ரீவைத்திலிங்கம் வித்தியாசாலையில் நேற்று வைக்கப்

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகளை அரசியலில் ஈடுபடுத்த அரசு முயற்சி?

[புதுடில்லி]

விடுதலைப்புலிகளை மீண்டும் தேசிய நீரோட்டத்தில் கலக்கச்செய்ய அரசு விரும்புவதாக இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு ஹரோல்ட் ஹேரத் இந்தியப் பிரதமர் திரு. நரம்மராவுக்குத் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கள் திரு. நரசிம்மராவைச் சந்தித்தபோதே திரு. ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் பாதுகாப்புக் குறித்தும், விடுதலைப்புலிகளின் நடவடிக்கை பற்றியும் சர்வகட்சி மாநாட்டில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் குறித்தும் பிரச்னை தீர்விற்காக அரசு மேற்கொள்ளும் முயற்சி பற்றியும் திரு. ஹேரத், இந்தியப் பிரதமரிடம் விளக்கிக் கூறியுள்ளார்.

## யாழ். மாவட்டத்தில் பரீட்சை நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் க. பொ. த. [உயர்தரப்]பரீட்சை விண்ணத்தாள்கள் உரிய காலத்தில் வரத் தாமதமாகினாலும் கூட பரீட்சை நடைபெறும் என்று யாழ் கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். அவர்மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

பரீட்சை வினாத்தாள்கள் எடுத்து வருவதில் ஊரடங்குச் சட்டம் இடையூறாக இருக்கிறது. இதனால் திட்டமிட்டபடி 3ம் திகதி பரீட்சை நடப்பதற்கு வினாத்தாள்கள் வராமல் இருக்குமானால் யாழ். மாவட்டத்திற்கு வினாத்தாள்

[4ம் பக்கம் பார்க்க]

## கொப்பேகடுவ, விமலரட்ண மயிரிழையில் உயிர்தப்பினர்

(கொழும்பு)

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி பகுதியில் கடந்தவாரம் இடம்பெற்ற உக்கிர மோதலில் வடபகுதிக்கான இராணுவ தளபதி மேஜர் டென்சில் கொப்பேகடுவவும், யாழ். மாவட்ட இராணுவ தளபதி பிரிகேடியர் விஜய் விமலரட்

[4-ம் பக்கம் பார்க்க]

## யுத்தம் பற்றி பேசினால் ஆபத்து; சமாதானம் பற்றி பேசுவோம்

[கொழும்பு]

இராணுவத்தின் தலைமைப் பீடத்திலுள்ள ஒரு சில பிரிவினர் வடக்கு - கிழக்கு யுத்தத்தைக் கையாளும் விதத்தைப்பார்க்கும் போது, நாம் யுத்தத்தைப்பற்றி பேசுவதை விட்டுவிட்டு சமாதானத்தைப் பற்றி பேசவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் இவ்வாறு தெரிவித்திருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது

(2ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டும்

(புதுடில்லி)

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவசிங் சோலங்கி தெரிவித்தார் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்திவெளியிட்டுள்ளது.

புலிகளின் நடவடிக்கைகளால் இலங்கைக்கு மட்டுமல்ல இந்தியாவிற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலவச உணவு விநியோகம் நாளைமுதல் நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களிலும் நாளை முதல் இம்மாதத்துக்கான இலவச உணவு விநியோகத்தை மேற்கொள்ளவுள்ளன.

இம்மாதம் 9ம் திகதிக்கு முன்னர் சகலருக்குமான உணவு

(4-ம் பக்கம் பார்க்க)

## படைக்கு உதவ வெளிநாட்டு டாக்டர்கள்

[கொழும்பு]

வடக்கு - கிழக்கில்போரிடும் படையினருக்கு சிகிச்சை அளிக்க கியூபா, மலேசிய நாட்டு டாக்டர்கள் வரவழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் கடமையிலில்லாத போது வேறு டாக்டர்கள் இல்லாததால் காயமடைந்த 8 படையினர் உயிரிழக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாம்.

(2ம் பக்கம் பார்க்க]

## வீரவணக்கம்

[யாழ்ப்பாணம்]

கடந்த 31-ம் திகதி ஆனையிறவில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் மரணம் அடைந்த துணைப்படை வீரர் கண்ணனுக்கு [ந. பகீரதன், பளை] விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# வரி விளம்பரம்

## அக்குபங்சர் & ஹோமியோபதி சிகிச்சை

கொழும்பு தெற்கு அரச வைத்தியசாலையில் கடமையாற்றும் விரிவுரையாளரினால் நாரிப்பிடிப்பு, மூட்டுவாதம், தொய்வு, கபாலக்குத்து, தோல்வியாதிகள், நரம்பு தொடர்பான தீராத நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டுவருகிறது. மேலதிக விபரங்களுக்கு: இல: 121/2. மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், இல: 95, யாழ் வீதி, மானிப்பாய். திருமதி சத்தியமூர்த்தி கருவேலடி லேன், கொக்குவில்.

(சி-5054)

## தேவை

பிரபல ஸ்தாபனம் ஒன்றுக்கு சிறந்த தமிழ் எழுத்து எழுதக் கூடிய கணக்கு எழுதுவதில அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலரும் தேவை. சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. சி 5056 C/O ஈழநாடு யாழ்ப்பாணம்.

(சி-5056)

## சித்திரப்பாடம்

உயர்தரக் கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை 5-8-91 சித்திரம் 1 தோற்றும் மாணவ மாணவியர் பயில்வதற்கு இலகுவான சித்திரம் வினவிடை புத்தகம், பூபாலசிங்கம், மண்டேலா, ஸ்ரீகாந்த், மக்மிலன், ஆல் சிலோன், தினேஷ், ஸ்ரீலங்கா, பாரதி, மிடிள்பேர்க், புத்தகக் கடை, கல்வியங்காடு எங்கும் விற்பனையாகின்றது.

(சி-5052)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

1990 1-ம், 2-ம், 3-ம், 4-ம் கல்வியாண்டு

### பரீட்சைகள்

கலை / வர்த்தகம்/ முகாமைத்துவம்

மேற்படி பரீட்சைகள் யாவும்ஒரு மாத காலத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளன. புதிய திகதிகள் பின்பு அறிவிக்கப்படும்.

பதிவாளர்

(எ 1471)

## படைக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இது பற்றி மேலும் தெரிவிக்கையில்; செங்கலடியில் இடம்பெற்ற கண்ணிவெடியில் காயப்பட்டபடையினர் பொலநறுவ ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் அங்கு கடமையாற்றிய 'கியூபா' நாட்டு டாக்டர்கள் லீவில் சென்றதால் உடனடியாக அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனராம்.

அங்கு கடமையாற்றும் மலேசிய டாக்டர்களும் அங்கு இருக்கவில்லையாம். மேற்படி இரு ஆஸ்பத்திரிகளிலும் இவர்களுக்குப் பதிலாக வேறு டாக்டர்களும் இருக்கவில்லையாம். இதனால் 8 படையினர் மரணமடைந்தார்களாம்.

(சி)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# வெடிகுண்டு தயாரிப்பு: திராவிடர் கழகத்தை சேர்ந்த இருவர் கைது!

[சென்னை]

வெடிகுண்டுப் பொருட்களை தயாரித்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த திரு ராமகிருஷ்ணன், திரு. அரிசாமி ஆகியோர் தமிழக பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கோவையையடுத்த ஆவாரம் பாளையத்தில் வெடிகுண்டுகளுக்குத் தேவையான மூலப் பொருட்களை உற்பத்திசெய்யும் தொழிற்சாலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாகவும் இவர்கள் தங்கியிருந்த வீட்டில் 400 ஜெலற்றின் குச்சுகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் காவல்துறை அதிகாரி திரு. தேவாரம் நேற்று கோவையில் தெரிவித்தார்

இவர்கள் மீது வெடிமருந்து பாவனை தடைச்சட்டம், மற்றும் இந்திய ஆய்வுச்சட்டத்தின்கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(க)

## கூட்டம்

[யாழ்ப்பாணம்]

நெல்லை க.பேரன் நினைவஞ்சலிக்கூட்டம் இம் மாதம் 4-ம் திகதி ஞாயிறு காலை 9-30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமையில் நடைபெறும்.

## பிரார்த்தனை

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவுப் போரில் விடுதலைப்புலிகளுக்கு வெற்றி வேண்டி இன்று 2-ம் திகதி வெள்ளிக்கிழமை கைதடி தெற்கு சனசமூக நிலையத்தினால் விஷேட பிரார்த்தனை நடத்தப்படவுள்ளது.

நிலையத்தலைவர் சி பரமசாமி தலைமையில் கைதடி தாக்கடிப் பொத்தான் வைரவர் ஆலயத்தில் இப்பிரார்த்தனை நடைபெறும்.

## இராசி பலன்

02 - 08 - 1991

(தமிழ்த் திகதி ஆடி 17)

வெள்ளிக்கிழமை

ஸப்தமி பி. இ. 2-06 வரை. ரேவதி மு பகல் 8-27 வரை.

அமிர்தயோகம், இராகு காலம் காலை 10-33 முதல் 12-03 வரை.

சுபநேரம்; காலை 6-03முதல் 7-33 வரை.

மேடம்: கற்பனை மிகுதி, தெய்வீக செலவு. தொழில் சிறப்பு.

இடபம்: குடும்ப சச்சரவு, அதிக யோசனை, தொழில் நஷ்டம்.

மிதுனம்: உத்தியோக உயர்வு, பணவரவு, குடும்ப சுகம்.

கடகம்: மனக்களிப்பு, பொதுப்பணி, கடமையுணர்வு.

சிங்கம்: வாக்குக் கலகம், மனக்குறை, உறவினர் தொல்லை.

கன்னி: தொழில் பிணக்கு, நண்பர் பகை, குடும்பக்கவலை.

துலாம்: வருவாய் அதிகரிப்பு, தொழில மகிழ்ச்சி, காரியசித்தி.

விருச்சிகம்: தொழில் பாராட்டு குடும்பச் செலவு, கல்வியால் சிறப்பு

தனுசு: காரியத்தடை, உறவினர் வருகை, பயண தொல்லை.

மகரம்: பதட்டம். கவனக் குறைவு, குடும்பகவலை.

கும்பம்: சுபகாரிய செலவு, தொழில் லாபம். மனைவியால் பெருமை.

மீனம்: எதிர்பாராத தொல்லை, அடிபண்தல், மனக்கவலை.

- ஜோஸ்யர்

# கண்ணீர் அஞ்சலி

கிளி/ புனித திரேசா மகளிர் மகாவித்தியாலய முன்னாள் உதவி அதிபர் திரு. அ. லோ. அரியநாயகம் அவர்களின் அன்பு மனைவி

## அமரர் புளோரன்ஸ் அருந்தவமலர்

"எங்கள் அம்மா"

அவர்கட்கு

## எங்கள் கண்ணீர் அஞ்சலி

மற்றும் இவரது பிரிவால்துயருறும் அன்புமகன்எங்கள் தலைவர் பாலநாயகம், அன்புக் கணவர் மற்றும் பிரான்ஸில் இருக்கும் அன்புப் பிள்ளைகள் அன்ரன் யேசுநாயகம், போல் கிறிஸ்ரி நாயகம், இங்கிருக்கும் திருமதி பு. அமலநாயகி, மருமகன் புவிநாயகம், பேரப்பிள்ளைகள் கொழும்பில் இருக்கும் றோ சாந்தநாயகி, பேரப்பிள்ளைகள் கனடாவில் இருக்கும் மருமகன் றேகான் யோசப், இங்கிருக்கும் பிள்ளைகள் வசந்தநாயகி, மரியநாயகி, இதயநாயகி மற்றும இவரது இறப்பால் துயருறும் உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"அம்மா நீங்கள் எங்கள் அம்மா
நித்திய ஒளியினுள் பிரவேசிக்க
எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்"

செவிப்புலனற்றோர் உறுப்பினர்
யாழ்ப்பாணம்

[சி 5058]

# யாழ். வர்த்தகர் சங்கம்

விசேட பொதுக்கூட்டம் 03-08-1991 சனிக்கிழமை மாலை 2-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். பல முக்கிய விடயங்கள் பற்றி ஆலோசிக்கப்படவிருப்பதால் சகல வர்த்தகர்களும் குறித்த நேரத்திற்கு தவறாது சமுகம் கொடுக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

சி. நமசிவாயம் — பொதுச்செயலாளர்

க. வி. குலரத்தினம் — தலைவர்

(சி5055)

# வட இலங்கைச் சங்கீத சபை

## வைர விழா 08-08-1991

மேற்படி வைர விழாவில் இதுவரை ஆசிரிய தராதரப் பரீட்சையில் (தரம் ஆறு) சித்தியெய்திய கலைஞர்களுக்கு விழாவின்போது விசேட பட்டமளிப்பு வைபவமும் நடைபெறவுள்ளது. தகைமை பெற்றவர்கள் 03-08-91 அன்று பி. ப. 4 மணிக்கு முன்னர் அலுவலகத்தில் தமது விபரங்களை ஒப்படைக்கவும்.

விபரங்களை வழங்கியவர்கள் 06-08-91 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு யா/இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறும் ஆரம்ப வைபவத்தில் தவறாது பங்குகொள்ளவும்.

இ. சுந்தரலிங்கம்.
கல்விப் பணிப்பாளரும்,
வட இலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(எ-1472)

# முதல் திங்கள் நினைவு நாள்



## வரதன்

[அப்புச்சி]

[நடராஜா வரதராஜா]

1959 - 12 - 22 1991 - 07 - 03

வரதன்-
எங்கள்
காற்றும், மண்ணும், கடலும்
உன் மரணம் கேட்டுத் திகைத்தன.

சிங்களத் தேசத்தில்
உன்னை நீ இழந்ததைக் கேட்டு
எங்கள் இதயங்கள் இயங்க மறுத்தன

ஆனாலும்,
நாம் ஆறுதலடைகின்றோம் - ஏனெனில்
உன் மரணம்-
உன்னதமானது - அர்த்தமுள்ளது

அன்பு அம்மா, தங்கை, அண்ணு,
நண்பர்கள்.

சாமியன் அரசடி,
கரவெட்டி.

(சி 5057)

# ‘குழியை 3 தடவை வலம்வரச்செய்து கணவனை சுட்டுக் கொன்றனர்’

## கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவ ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையில் பெண் சாட்சியம்

(மட்டக்களப்பு)

“குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற குழிக்கு அருகே எனது கணவனை கொண்டு சென்றதை அருகில் உள்ள குளக்கட்டு ஒன்றில் இருந்து பார்த்தேன். எனது கணவனையும், ஏனையோரையும் அக்குழியை மூனறு தடவை சுற்றி வருமாறு கூறி அவர்களை சுட்டு குழிக்குள் போட்டு படையினர் எரித்தனர். இதனைஎனது கண்ணால் கண்டேன்.’’

இவ்வாறு கொக்கட்டிச்சோலை படுகொலை சம்பவங்கள் குறித்து தனது விசாரணையை ஆரம்பித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த பாலிம்போடி அரசம்மா (35) தெரிவித்தார்.

இந்த ஆணைக்குழுவின் விசாரணைகடந்த 29ம்திகதி மட்டக்களப்பு விமானப்படை முகாமில், ஆணைக்குழு உறுப்பினர்களான ஓய்வுபெற்ற நீதியரசர் ஒ. எஸ். எம். செனிவிரத்தின, (தலைவர்) ஓய்வுபெற்ற நீதியரசர் சிவா செல்லையா, கலாநிதி ஏ. எம். எம். சகாப்தீன் முன்னிலையில் ஆரம்பமானது.

முதலாவது சாட்சியான பாலிப்போடி அரசம்மா கொக்கட்டிச்சோலை சம்பவத்தில் பலியான சபாபதி சந்தோஷம் என்பவரின் மனைவியாவார்.

ஆணைக்குழு முன்னிலையில் முதலாவது சாட்சியான இவர் மேலும் கூறியதாவது:

12-06-1991இல் குண்டு வெடித்த சம்பவம் எனக்கு நினைவில் உள்ளது. நானும் கணவரும் எனது பிள்ளைகளும் அன்றைய தினம் வீட்டில்இருந்தோம்.

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து சிறியவேட்டுச் சத்தங்கள் கேட்டன. வீடுகளுக்கு தீயிடப்பட்டது. எனது வீட்டுக்கு ஒன்றும் நடக்கவில்லை. ஆனால் சுற்றிலும் நடப்பவைகளைப் பார்த்தபோது ஏற்பட்ட பயத்தினால் நானும், கணவரும் பிள்ளைகளும் தப்புவதற்காக மகிழடித்தீவுபாடசாலைக்குச் சென்றோம்.

மாணவர்களும், பொதுமக்களும் பாடசாலையில் இருந்தனர். பாடசாலை முடிந்தபோதிலும் பயத்தினால் மாணவர்கள் வெளியே வரவில்லை. வீட்டில் இருந்து பாடசாலை செல்வதற்கு 15 நிமிடம் எடுத்தது. பள்ளிக்கூட வளவுக்குள் எனது 4 வயது பிள்ளையை மடியில் வைத்திருந்தபோது இராணுவ உடை அணிந்த நானகு பேர் எனது கணவரையும் இன்னும் 16 பேரையும் கூட்டிச்சென்றனர்.

### சங்கிலியை கொடுத்தேன்

நான் எனது சங்கிலியை இராணுவ உடை அணிந்தவர்களிடம் கழற்றிக்கொடுத்து எனது கணவரை விடுமாறு கதறி அழுதேன் எனது சங்கிலி பறிபோனது கணவரையும் அவர்கள் விடவில்லை.

பாடசாலையில் இருந்த ஏனையோரையும் அவர்கள் தாக்கினர். இராணுவ உடை தரித்திருந்த அந்த நால்வரையும் நான் முன்னர் காணவில்லை. ஆனால் இராணுவ உடை தரித்தோர் எனது கிராமத்திற்கு வந்து போவதை கண்டிருக்கிறேன். இராணுவ உடை அணிந்தோர் தமிழில் கதைத்தனர்.

கணவரைக்கொண்டுசென்றபோது பின்னால் ஓடினேன். அவர்கள் கத்தியைக காட்டி என்னைப் பயமுறுத்தினர். குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெற்ற குழிக்கு அருகே கணவரைக் கொண்டு சென்றதை அக்குழிக்கு சற்று அருகில் உள்ள குளக்கட்டில இருந்து பார்த்தேன.

எனது கணவரையும் ஏனையோரையும் மூன்று தடவை அக்குழியைச் சுற்றி வருமாறு பணித்தனர். பின்னர் சுட்டு விட்டு குழிக்குள் போட்டுஎரித்தனர். இதனை எனது கண்ணால் கண்டேன்.

27-6-1991ல் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு ஆணைக்குழு வந்தபோது சடலங்கள் போடப்பட்ட குழியையும், சம்பவத்தை நான் நினறு பார்த்த இடத்தையும் காட்டினேன்.

எனது கணவரின் தொழில் கமம் அவரது வயது 42. மாதம் 300 ரூபா வருமானம் கிடைக்கும் 5 பிள்ளைகள் உள்ளனர். மூத்த பிள்ளையின் வயது 17. கடைசிப் பிள்ளைக்கு வயது 4. இறந்த எனது கணவரின் பெயரை கிராம சேவை அலுவலரிடம் பதிவு செய்துள்ளேன்.

கணவர் இறந்த குழியை அதேநாள் பிற்பகல் ஐந்து மணி அளவில் பார்த்தேன். எனது கணவரின் முகம் அரை குறையாக எரிந்திருந்ததால் அடையாளம் கண்டுகொண்டேன். ஒன்றுக்கு மேல் ஒன்றாக வேறு சடலங்களும் எரிந்த நிலையில் இருந்தன. முகம் எரியாத சடலங்கள் அடையாளம் காணக்கூடிய நிலைமையில் இருந்தன.

இவ்வாறு சாட்சி கூறினார்.

### குறுக்கு விசாரணை

சாட்சிகளின் நலனைக் கவனிக்க ஆஜரான சட்டத்தரணி குமார் பொன்னம்பலத்தின் குறுக்குவிசாரணையில் சாட்சி பதிலளித்ததாவது:-

கேள்வி: குழியடியில் சடலங்கள் போடப்பட்ட போது சீருடையில் எத்தனை பேர் இருந்தனர்?

பதில்: என்னால் அப்போது எண்ண முடியவில்லை.

கே: குழிக்குள் 17 சடலங்கள் போடப்பட்ட அந்த சம்பவம் எவ்வளவு நேரத்திற்கு நீடித்தது?

ப: கொஞ்சநேரம் எடுத்தது.

கே: அந்த சம்பவத்திற்குப் பின் குண்டு வெடித்த குழியடியிலிருந்து இராணுவத்தினர் வெளியேறியதை கண்டீரா?

ப: ஆம்

கே: குழியைவிட்டுச் சென்ற அனைவரும் இராணுவ உடையில் இருந்தனரா?

ப: ஆம்

இதன் பின்னர் கொக்கட்டிச்சோலை சம்பவம் இடம்பெற்ற தினத்திலன்று கடமையிலிருந்த இராணுவத்தினரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி காந்திலால் குமாரசிறி கேட்ட கேள்விகளுக்கு சாட்சி பின்வருமாறு பதிலளித்தார்.

கே: குழியை விட்டு இராணுவம் சென்ற பின்னர் குழியடிக்குச் சென்றீரா?

ப: ஆம்.

கே; குழியில் கணவரின் சடலம் இருந்தது. அரைகுறையாக முகம் எரிந்திருந்ததால் அடையாளம் காணமுடிந்தது என்று கூறினீரா?

ப: ஆம்.

கே; வேறு எத்தனை சடலங்கள் எரியாது இருந்தன?

ப: எனது கணவரின் முகத்தை மட்டும் அடையாளம் கண்டேன். கீழே வேறு சடலங்களும் காணப்பட்டன. அவற்றை என்னால் அடையாளம் காணமுடியவில்லை.

கே: வானத்தைப் பார்த்தபடி உங்கள் கணவரின் சடலம் இருந்ததா?

ப: ஆம்.

கே: ஏனைய சடலங்களும் வானத்தை பார்த்தபடியா அல்லது குப்புறவா கிடைந்தன?

ப: வேறுபட்ட நிலைகளில் இருந்தன.

கே: மடுவில் கண்ட பின்னர் அதனை வேறு எப்போது கண்டீர்?

ப: வேறு எப்போதும் காணவில்லை. நாங்களே மடுவுக்குத் தீ வைத்துக்கொளுத்தினேம். காரணம் சடலங்கள் அரை குறையாக எரிந்திருந்ததால்.

கே: சம்பவம் நடந்த அன்று குண்டு வெடிப்புச் சத்தமும் தொடர்ந்து துப்பாக்கி வேட்டும் கேட்டதாக கூறினீரா?

பதில்: ஆம். சிறிய வெடி சத்தங்கள் கேட்டன.

கே: ஒரு பகுதியினரால் சுடப்பட்டதா அல்லது இரு பகுதியினரால் ஒருவருக்கொருவர் சுடப்பட்டதா?

ப; இராணுவத்தால் மட்டும் சுடப்பட்டது.

கே: குண்டு வெடிப்பின் பின் இராணுவத்தினர் சுட்டதைக் கண்டீர்களா?

ப: சத்தத்தை மட்டும் கேட்டேன்.

கே: யார் யாருக்கு சுட்டனர் என்று கூறமுடியுமா?

ப: என்னால் கூறமுடியாது.

கே: குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டபோது நீரும் உமது பிள்ளைகளும் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லவேண்டுமென்பது உமக்கு முக்கியமாகப்பட்டதா?

ப: ஆம்.

கே: பாடசாலைகளிலிருந்து ஆட்களைக் கொண்டு சென்றவர்கள் என்ன உடுத்தியிருந்தனர்?

ப: இராணுவ உடை.

கே: குளககட்டில் நீர் இருந்தபோது வேறு யார் உம்முடனிருந்தனர்?

ப: இச்சம்பவத்தில் தனது கணவனை இழந்த எனது தங்கை ராசம்மாவும், வேறு பெண்களும் இருந்தனர்.

கே: உங்களுடன் வேறு எத்தனை பேர் குளக்கட்டில் இருந்தனர்?

ப: நான் உட்பட பாடசாலையிலிருந்து அழைத்துச்செல்லப்பட்ட 17 பேரின் உறவினர்கள்.

கே; பத்து பேரா அல்லது இரண்டு மூன்று பேரா குளக்கட்டில் இருந்தனர்?

ப; 10 பேர் வரை.

கே; குளக்கட்டில் நின்றபடி உமது கணவனைக்காண முடிந்ததா?

ப: திறந்தவெளியாக இருந்ததால் காணமுடிந்தது.

கே: கணவனைத்தவிர வேறு கூட்டிச் சென்ற ஆட்களையும் காணமுடிந்ததா?

ப: சகோதரியின் கணவர் அரியநாயகத்தை அடையாளம் கண்டேன்.

ஆணைக்குழுவின் தலைவர்: இச் சம்பவத்தின் போது உம்முடன் இருந்த சகோதரியும் சாட்சியம் அளிக்க வந்துள்ளாரா?

ப: ஆம்.

சட்டத்தரணி; கொக்கட்டிச் சேலை இராணுவ முகாம் எப்போது அமைக்கப்பட்டது?

ப: இரு வருடங்களுக்கு முன்னர்.

கே: இரண்டு வருட காலத்தில் நீரோ அல்லது உமது குடும்பத்தவர் எவரோ எச்சந்தர்ப்பத்திலாவது முகாமை சேர்ந்தவர்களால் பாதிக்கப்பட்டனரா?

ப: இல்லை.

ஆணைக்குழுவின் செயலாளர் எஸ். கே. ஜினசேனவும் விசாரணையின போது சமுகமளித்திருந்தார்.

இராணுவத்தினரின் நலன்களை கவனிக்கவென பிரிகேடியர் மேர்வின் சமரக்கோன், காப்டன் லலித் எக்கநாயக்க ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

பார்வையாளர் தரப்பில் எம். பீக்களான ஜோசப் பரராஜசிங்கம், பிறின்ஸ் காசிநாதர் ஆகியோரும் இரண்டு செய்தி நிருபர்களும் இருந்தனர்.

அதிகாரிகள் தரப்பில் பட்டிப்பளை உதவி அரச அதிபர்களான சி.பாஸ்கரன், க. செயதரன் மற்றும் முதலைக்குடா, மகிழடித்தீவு கிராமசேவை அலுவர்கள் வந்திருந்தபோதிலும் மேற்படி நால்வரும் சாட்சிகளாகவும் இருப்பதனால் அவர்கள் விசாரணைகளை அவதானிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

16 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்தனர்.

## சட்டவிரோதக் கள் விற்பனை தடை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பரிஷ் தெங்குப் பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க எல்லைப் பரப்பிறகுள் வசிக்கும் அங்கத்தவர்கள் சட்டவிரோதமாகக் கள் விற்பனை செய்வது முற்ருகத் தடை செய்யப்பட்டுள்ளது.

உற்பத்தி செய்யப்படும் கள் முழுவதையும் சங்கக் கிளைகளில் கொடுக்க வேண்டும். அத்துடன் வீடுகளில் இருந்து கள் பருகும் பாவனையாளர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள். அங்கத்தவர்கள் அனைவரும் பதநீர் உற்பத்தியில் கூடியகவனம்செலுத்தப்படல் வேண்டும் எனவும் மேற்படி சங்கத்தின் பொது முகாமையாளரும், விஸ்தரிப்பு உத்தியோகத்தரும் கேட்டுக் கொள்கின்ருர்கள்.

## எமது மண்ணை மீட்க எல்லோரும் வரவேண்டும்

[யாழ்ப்பாணம்]

சிங்கள நாட்டில் 20,000 இளைஞர்களை ஆனையிறவுக்குப் போகப் புதிதாகப் படையில் சேர்க்கிருர்கள். எங்களில் எவ்வளவு பேர் ஆனையிறவுக்குப போய் எமது மண்ணை மீட்க விருப்பம் கொண்டிருக்கிறீர்கள். ஒரு கொழும்பு சிங்களவனுக்கு, மாத்தறை சிங்களவனுக்கு உள்ள ரோசம், மானம் எங்களுக்கு இருக்கா என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

இவ்வாறு யாழ்ப்பணம் பெருமாள் கோவிலடியில் நடைபெற்ற போர்க்கால அறைகூவல் கருத்தரங்கில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகரான தேவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தமிழீழம் பெற்றுத்தர ஒரு தலைவர் இருக்கிருர். அவர் பின்னால் நாம் சென்று சுதந்திர தமிழீழம்மீட்க சிறுவர், பெரியோர், பெண்கள், ஆண்கள் என்று வேறுபாடின்றி இணைந்து போராட வேண்டும். [152]

## யுத்தம் பற்றி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வடக்கு கிழக்கு யுத்தம் பற்றிய அரசின் போக்கு ராணுவ நடவடிக்கையின் முன்னேற்ற நிலைமையிலேயே முற்று முழுதாகத் தங்கியிருக்கிறது.

ஶ்ரீலங்கா விமானப்படையின் விமானங்கள் முன்னர் இரண்டாயிரம் அடிஉயரத்தில் பறந்து விடுதலைப்புலிகளின் இலக்குகளை இலகுவில் தாக்கக் கூடியதாக இருந்தன ஆனல் இன்று நிலைமை வேறு.

எமது விமானங்கள் 5,000 அடி உயரத்துக்குமேல் பறந்தே தாக்குதல் நடத்த வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் விடுதலைப் புலிகள் விமான எதிர்ப்பு ஆயுதங்களை வைத்திருப்பதாகும்.

அவர்கள் என்ன விதமான விமான எதிர்ப்பு ஆயுதங்களை வைத்திருக்கின்றனர் என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

### 10 பீரங்கிகள் புலிகள் வசம்

எனினும், 30 எம். எம். பீரங்கிகளை அவர்கள் வைத்திருப்பதாக நம்பப்படுகிறது. இந்த ரகத்தைச்சேர்ந்த 10 பீரங்கிகள் அவர்களிடம் இருப்பதாகத் தெரியவந்துள்ளதாக அந்தப்பத்திரிகை மேலும் தெரிவித்திருக்கிறது.

## உற்சவம்

[கோப்பாய்]

கோப்பாய் மத்தி ஶ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும்.

## ஏவுகணை குறைப்பு ஒப்பந்தம் கைச்சாத்து

[மாஸ்கோ]

நெடுந்தூர ஏவுகணைகளை முப்பது வீதமளவில் குறைத்துக் கொள்வதென அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் இணங்கியுள்ளன.

ஏவுகணைக் குறைப்பு விடயமாக 9 வருடங்களாக இவ்விருநாட்டு முக்கிய பிரதிநிதிகளுக்கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின் நேற்று மாஸ்கோவில் ஒப்பந்தம் கைச்சாத்தாகியது.

மாஸ்கோ நகரில் உச்சிமாநாடு நடத்திய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கும். சோவியத் ஜனாதிபதி மிகையில் கொர்பச்சேவுக்கும் இடையில் இந்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்தானது. (பூ)

## ★ இனப்பிரச்னையை தீர்க்க அரசு காலம் தாழ்த்துவதால் யுத்தம் மோசமடைகிறது

### சிறிமா குற்றச்சாட்டு

(கொழும்பு)

இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்திடம் எந்த விதமான உறுதியான திட்டமும் கிடையாது இரண்டு வருடங்களாக இயங்கிவரும் சர்வகட்சி மாநாடுகூட இருப் பிரச்னைத் தீர்வுக்கு உருப்படியாக எதையும் இதுவரை முன்வைக்கவில்லை. சர்வகட்சி மாநாடு இப்போது கூடுவதும் இல்லை.

எதிர்க் கட்சித் தலைவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவருமான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

இனப்பிரச்னைக்கு நாம் ஒரு தீர்வை முன்வைக்கவில்லை என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தொடர்ந்தும் எம்மைக் குற்றம் சுமத்தி வருகிறார். பிரச்னைக்கான தீர்வு அரசாங்கத்தாலேயே முன்வைக்கப்படவேண்டும்.

தீர்வுக்கு அதிக பட்சமாக எதை வழங்க முடியுமென்பதை அரசாங்கம் அறிவிக்க வேண்டும். அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட தீர்வு ஏற்றுக் கொள்ளக்கூடியதா என ஸ்ரீ. ல. சு. கட்சி அதன்பின் விவாதிப்பதற்குத் தயாராகவே இருக்கிறது.

பிரச்னைக்கான தீர்வை எடுப்பதில் அரசாங்கம் காலம் தாழ்த்துவதால் யுத்தம் ஒரு மோசமான நிலையை அடைந்திருக்கிறது. துர்ரதிஷ்டவசமாக இராணுவத்தினர் மடிந்து கொண்டிருக்கிறார்கள் என்றார்.

## 'பவள்' தகர்ந்ததை அரசும் ஒப்புக்கொள்கிறது

(கொழும்பு)

அம்பாறை கஞ்சிகுடிச்ச ஆற்றுப்பகுதியில் கடந்த வாரம் தென் ஆபிரிக்க தயாரிப்பான 'பவள்' கவசவாகனம் புலிகளின் சக்தி வாய்ந்த கண்ணிவெடித் தாக்குதலினால் தகர்க்கப்பட்டதாக அரசுதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கவசவாகனத்திலிருந்த விசேட அதிரடிப்படையின் பிரதம இன்ஸ்பெக்டர் எஸ் அசோக்குமார் (வயது-32) உட்பட மற்றொரு கொமாண்டோ பொலிஸும் கொல்லப்பட்டதாக 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது. (சி)

### விடுதலைப்புலிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சர்: திரு. மாத்தயா; வெளியுறவுத் துறை அமைச்சர்: அன்ரன் பாலசிங்கம்; நிதி, உள்துறை அமைச்சர்: யோகரத்தினம் யோகி; விவசாயம், உணவுத் துறை அமைச்சர்: வி. பாலகுமார்; மறுவாழ்வுத்துறை அமைச்சர்: திரு. பரராஜசிங்கம் [முன்னாள் எம். பி.] என இவர்களுக்குப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. பிரபாகரன் என்னென்ன பதவிகளை வகிக்கிறார் என்று தெரியவில்லையென்றும் அச்செய்தி தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. [பூ]

### வெற்றி வேண்டி பிரார்த்தனை

[யாழ்ப்பாணம்]

வீரமரணமடைந்த வீர வேங்கைகளின் ஆத்மசாந்திக்காகவும், காயமடைந்தவர்கள் சுகமடைய வேண்டியும், போர்க்களத்தில் தீரமுடன் போராடும் வீரவேங்கைகளுக்கும் ஆத்மபலம் வேண்டியும் நவிண்டில் குலனை விநாயகர் ஆலயம், பருத்தித்துறை சித்தாந்திரை விநாயகர் ஆலயம், கரணவாய் உச்சில் புவனேஸ்வரி ஆலயம் ஆகியவற்றில் இன்று வெள்ளிக்கிழமை விசேட பூசையும், பிரார்த்தனையும் நடைபெறும்.

## கடற்படைக்கு மேலும் 4 கப்பல்

[கொழும்பு]

இலங்கை கடற்படையினருக்கு புதிதாக நாலு கப்பல்கள் வழங்கப்பட்டுள்ளன இவற்றில் இரண்டு சிங்கப்பூரிலும், ஒன்று சீனாவிலும் மற்றையது உள்ளூர் தயாரிப்பிலுமிருந்து பெறப்பட்டுள்ளன.

கொழும்பில் தயாரிக்கப்பட்ட 34மீற்றர் நீளமான இப் போர்க்கப்பலுக்கு 60 மில்லியன் ரூபா செலவேற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்வதைவிட உள்ளூரில் கப்பல்கள் தயாரிப்பது செலவு குறைந்ததாகுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [சி]

### இலவச உணவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விநியோகம் நடைபெறவேண்டுமென்று சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வற்புறுத்தப் பட்டுள்ளது.

அடுத்த கட்ட விநியோகம் இம்மாதம் 9ம் திகதி முதல் 15ம் திகதிக்கிடையில நடைபெறுமென்றும் தெரிவிக்கப்பட்டது. [வி]

### ஆவணங்களின்றி

(4-ம் பக்கம் பார்க்க)

தாகவும் இந்திய மத்திய அரசு அமைச்சரொருவர் தெரிவித்தார்.

ஆவணங்கள் எதுவுமின்றி தங்கியிருப்பவர்கள் கைது செய்யப்பட்டு உடனடியாக நாடு கடத்தப்படுவர் என்றும் அவர் கூறினார். (பூ)

## புலிகளிடம் யுத்த விமானம்? கண்டுபிடிக்க 'ராடர்' தருவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் விமான எதிர்ப்பு ஆயுதங்களை மாத்திரமல்ல விமானங்களையே வைத்துள்ளனர் என்று சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவு கண்டுபிடித்திருக்கிறதாம்.

வடபகுதியின் வானவெளியில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இனந்தெரியாத விமானம் விடுதலைப்புலிகளுக்கு சொந்தமானதாக இருக்கலாமென இராணுவ புலனாய்வுப் பிரிவு சிறிலங்கா விமானப் படைக்கு தெரிவித்திருக்கிறது.

இந்தத் தகவலையடுத்து விமானப்படை உஷார் படுத்தப்பட்டிருக்கிறது.

இதேவேளையில் வடக்கு-கிழக்கு பகுதியின் வான்வெளியில் பறக்கும் அடையாளம் காணமுடியாத விமானங்களைக் கண்டுபிடிப்பதற்கு நவீன ராடர் சாதனங்களும், அந்த விமானங்களுடன் திடீர் தாக்குதல் நடத்துவதற்கு ஏதுவான 'சுப்பர்சோனிக்' போர் விமானங்களும் இலங்கை அரசினால் கொள்வனவுசெய்யப் பட்டுள்ளன.

இந்த சுப்பர்சோனிக் விமானங்களைச் செலுத்துவதற்கான விசேஷ பயிற்சிகள் சிறிலங்கா விமானிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

### ஆனையிறவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனையிறவு முகாமை நோக்கி முன்னேறும் இராணுவத்தினர் புலிகளின் கடும் தாக்குதலை சமாளிக்க வேண்டியுள்ளதாகவும இது வரையும் நடைபெற்ற மோதலில் ஏழு இராணுவ உயர் அதிகாரிகள உட்பட149படையினர் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தார்.

### வீரவேங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

மக்களின் அஞ்சலியின் பின் தேவரண்ணா, தனபால், ரஞ்சன்மாஸ்டர் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினார்கள்.

கோப்பாய் மாவீரர் மயானத்தில் புகழுடல் தீயுடன் சங்கமமாக்கப்பட்டது.

### கொப்பேகடுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணவும் மயிரிழையில் உயிர் தப்பியதாக 'தினகரன்' செய்தி வெளியிட்டுள்ளது.

புல்லாவெளிக்கு அப்பால் தரித்து நின்ற படையின் நிலை ஒன்றின்முன் வீழ்ந்து வெடித்த புலிகளின் பீரங்கி மோட்டார் குண்டின் தாக்குதலிலிருந்தே இவ்விருவரும் மயிரிழையில் உயிர் தப்பினர். இவர்களுடன் நின்ற 3 படையினர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டனர்.

இந்த 3 படையினரும் அவ்விடத்தில் நின்றபடியாலேயே மேற்படி இரு தளபதிகளும் உயிர் தப்பினர். இல்லாவிடில் இத்தாக்குதல் இவ்விருவரையுமே பாதித்திருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## காரைநகர் பகுதியில் "ஒபரேசன் ஹைரைட்"

(கொழும்பு)

காரைநகர்ப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைக்கு "ஒபரேசன் ஹைரைட்" என்று பெயரிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தும் முயற்சியில் வடபகுதி கடற்படை பிராந்தியத்தின் கப்டன் எச் ஆர் அமரவீரா ஈடுபட்டுள்ளதாக அரச தரப்பு செய்திகள் தெரிவித்தன.

## ஒரு ரூபா சம்பளம் பெறும் முதல்வர் ஜெயலலிதா

[சென்னை]

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தமது முதல்வர் பதவிக்கான சம்பளப்பணத்தை பெறுவதில்லை என முடிவு செய்துள்ளாராம்.

இப்பதவிக்காக ஒரு ரூபாவையே தாம் பெறுவுள்ளதாகவும், மக்களுக்கு சேவையாற்றும் தமக்கு சம்பளம் தேவையில்லை என்றும் கூறியுள்ளார். (சி)

### ராணுவத்தின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள்:

நேற்றுக்காலையிலிருந்து விமானப்படையின் உக்கிரமான தாககுதலின் மத்தியில் கடுமையான தாக்குதலை நடத்தியவாறு ஆனையிறவு முகாமுக்குள் நுழைவதற்கு இராணுவத்தினர் முற்பட்டு வருகின்றனர்.

விடுதலைப்புலிகள் இம்முயற்சியை எதிர்த்து கடும தாக்குதலை மேற்கொண்டுவருகின்றனர். இதனால் இராணுவத் தரப்பில பலத்த உயிர்ச்சேதம ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நடைபெற்ற மோதலில் வடமராட்சியைச் சேர்ந்த கணேஷ் உட்பட சில போராளிகள் வீரமரணமடைந்தனர்.

இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## ★ கட்டைக்காடு, வெற்றிலைக்கேணியில் போலித் தோட்டாக்களைக் கக்கும் பீரங்கிப் படகுகள்

[கொழும்பு]

கட்டைக்காடு - வெற்றிலைக் கேணி பகுதிகளில் தரையிறங்கிய படையினருக்கு பீரங்கிப் படகுகளின் வெடியினால் ஆபத்து ஏற்படாமல் இருப்பதற்காக பொய்யான தோட்டாக்களையே பீரங்கிப்படகுகள் சுடுகின்றன என இராணுவ அதிகாரி ஒருவரை ஆதாரம் காட்டி 'கொழும்பு பத்திரிகை' ஒன்று தெரிவித்துள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற் பகுதியில் சூரியா, வீரயா. ரத்ன என்ற பீரங்கிக் கப்பல்கள் எந்நேரமும் நின்று தாக்குதலை நடாத்திக்கொண்டிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (153 சி)

### யாழ். மாவட்டத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்றுவருகின்றதோ அதன் அடுத்தநாள் முன்னர் வெளியிடப்பட்ட நேரசூசியின்படி பரீட்சைகள் நடைபெறும்.

நடைபெறாத பாடங்கள் இம்மாதம் 28ம் திகதிக்கு பின்னர் தொடர்ந்து நடைபெறும். பரீட்சையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் லீவுகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்தை தெரிவு செய்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் குறுகிய காலத்தில் யாழ். கல்வி திணைக்களத்தில் வைத்து விநியோகிக்கப்படும். (152)

### 2 மைல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகையாளர் மாநாட்டில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ந்தும் படையினர் முன்னேறி எவ்வேளையிலும் முகாமை கைப்பற்றலாமென்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

மேலும் வடக்கு - கிழக்கில் நடைபெறும் யுத்தம் பற்றிய தகவல்கள் அடங்கிய வீடியோ நாடாக்கள், றேடியோ கசற்றுகள், புகைப்படங்கள் மற்றும் தகவல்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப அரசு விதித்திருந்த தடை நீக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (சி)

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்

ஐந்தாவது புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை வினாப்பத்திரங்களை சனிக்கிழமை [03-08-91] காலை 7.00 மணிக்கு பெற்றுக்கொள்ளலாம்.

[எ 1470]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தொபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 2ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under License Number B/180388/81